கற்றலானது மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்பு வரை நடந்தேறி வருகின்றது என்பதைப் பல்வேறு உளவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

### துணைநின்றவை


- மீனாட்சிசுந்தரம் சு., (முதற்பதிப்பு, பிப்ரவரி 2010), முற்போக்கு கல்வி உளவியல், திண்டுக்கல்: காவ்யமாலா பப்ளிஷர்ஸ்.
- நாகராஜன் கி., (நான்காம் பதிப்பு ஜூலை 2012), கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், சென்னை: இராம் பதிப்பகம்.


******************

# மொழிப்பாடம் கற்பித்தலின் நோக்கம் IMPORTANCE OF LEARNING LANGUAGE


## முனைவர் க. உமாமகேஸ்வரி | Dr. K. Umamaheswari

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர். அலைபேசி : 9677240403, uma061982@gmail.com, Orcid Id 0000-0003-4814-7661



### ஆய்வுச்சுருக்கம்

வளர்கின்ற சமுதாயத்தின் வளர்ச்சிப்படியாக இருப்பது மொழி. ஒரு சமுதாயத்தின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, அரசியல் குறித்து அறிவதற்கு மொழி மிகவும் அவசியம். மொழியானது மாணவர்களின் அறிவை வளர்க்கவும், மாணவர்களின் அறிவு வளர்ச்சியின் மூலம் சமுதாயத்தை வளர்க்கவும், மாணவர்களின் நிலையை உயர்த்தவும், மாணவர்கள் செயல்படும் விதத்தை உணரவும், மாணவர்களின் செய்திப் பரிமாற்றத் திறனை உயர்த்தவும் மாணவர்கள் பிற நாடு, சமுதாயத்தோடு உறவு கொள்ளவும், மாணவர்கள் சமுதாயச் சாதனங்களான இலக்கியம், இலக்கணம், அறிவியல், கலை முதலியனவற்றை அறிந்து நயத்தை உணரவும் வழிவகுக்கும் ஒரு கருவியாக மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழை முதன்மொழியாகப் பயிற்றுவிக்கும்போது எந்த அளவுக்கு அவர்கள் மேற்கூறிய திறன்களையும் மொழிக்கூறுகளையும் பெற்றுள்ளார்கள் என்பதையும் இவற்றைக் கற்கும்போது அவர்களுக்கு என்னென்ன சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதனையும் அச்சிக்கல்களுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதனையும் இக்கட்டுரையில் காணலாம்.

### Abstract

Language is essential for understanding the history of society, civilization, culture, and politics. Language is useful for improving their learning skills. Using this skill they can develop the society, elevate the status of the students, realize the way in which the students function, enhance the communication skills of the students, it helps them to share new ideas. Language is essential for the development of a developing society. Language is essential for understanding the history of a society, civilization, culture, and politics. In this review, we will see to what extent they have acquired the above skills and linguistics while teaching Tamil as

a first language and what problems they face while learning these, and how to solve the problems.

**திறவுச்சொற்கள் (Keywords):** மொழிப்பற்று - மொழிக்கல்வி கற்றல் கற்பித்தல் - மொழிப்பாடம் கற்பித்தலின் குறிக்கோள் - மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கங்கள் - மாணவர்களின் மொழிச் சிக்கல் - கிராமப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் - நகர்ப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல்.

## முன்னுரை

மொழி என்பது மனித வரலாற்றோடு தொடர்புடையது. மனித இனம் தோன்றிய காலந்தொட்டே மொழியும் தோன்றியது எனலாம். ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு தொடர்பு கொள்ள முயன்ற வேளையில் மொழி மிகவும் அவசியமாக இருந்தது. மனித உறவை வலுப்படுத்தும் ஒரு சாதனமாக மொழி அமைந்தது சிறப்பான அம்சமாகும். மொழியின் ஆரம்பம் சைகை அடிப்படையில் அமைந்தது. மனிதனால் உருவாக்கப்பட்ட ஒலிகள் கேட்பவர்களுடைய செவிப்புலனைத் தாக்குவதன் மூலம் உணரப்பட்ட வேளையில் அது பேச்சு மொழியாகவும் அப்பேச்சுமொழிக்குக் குறிப்பிட்ட வரிவடிவம் கொடுக்கப்பட்டபோது அது எழுத்துமொழியாகவும் கருதப்பட்டது.

## மொழிப்பற்று

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உண்டாவதற்கு மொழிப்படிப்பு மிகவும் இன்றியமையாதது. எல்லா மக்களும் தத்தம் தாய்மொழியைச் சிறப்பித்துப் பேசுதல் இயல்பெனினும், எம்மொழியும் பெறாத சிறப்பினைத் தமிழ்மொழிதான் பெற்றிருக்கின்றது. மொழியை இறையுடன் இயைபுபடுத்திப் பேசும் வழக்கம் நம் நாட்டில் தான் உண்டு.

**கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து**

**பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ்**

என்று தமிழ்மொழி போற்றப்படுகின்றது.

மொழிக்கல்வி என்பது மொழியைக் கற்றல், மொழியைக் கற்பித்தல், மொழியறிவைச் சோதித்தல் எனப் பல செயல்களை உள்ளடக்கி நிற்கின்ற தன்மையையுடையது. தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் என்பது தமிழ் இலக்கியத்தைக் கற்பித்தல், பாடப்பொருளைக் கற்பித்தல் என்றிருந்த நிலை மாறி, மொழி கற்பித்தல், மொழித்திறங்களைக் கற்பித்தல், மொழிக்கூறுகளைக் கற்பித்தல் என்னும் உண்மை நிலையினை உணரச் செய்துள்ளது.

மொழியானது மாணவர்களின் அறிவை வளர்க்கவும், மாணவர்களின் அறிவு வளர்ச்சியின் மூலம் சமுதாயத்தை வளர்க்கவும், மாணவர்களின் நிலையை உயர்த்தவும், மாணவர்கள் செயல்படும் விதத்தை உணரவும், மாணவர்களின் செய்திப்பரிமாற்றத் திறனை உயர்த்தவும் மாணவர்கள் பிறநாடு, சமுதாயத்தோடு உறவு கொள்ளவும், மாணவர்கள் சமுதாயச் சாதனங்களான இலக்கியம், இலக்கணம், அறிவியல், கலை முதலியனவற்றை அறிந்து நயத்தை உணரவும் வழிவகுக்கும் ஒரு கருவியாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. மேற்கண்ட நோக்கங்களை அடையும் வகையில் பயில்நிலையில் மொழிக்கல்வியைத் தரம்பிரித்துத் தேவையான அளவில் புகட்ட வேண்டும் என மொழியியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்நாட்டில் கல்வி நிலையங்கள் அனைத்திலும் தமிழ்மொழி முதல்மொழியாய் உயர்கல்வி வரையிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பள்ளிக் கல்வியினைப் பார்க்கும்பொழுது, அது உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் முதல் மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருந்து வருகிறது. ஆனால் மாணவர்களிடம் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் சரியான முறையில் மொழிக்கூறுகளின் அடிப்படையில் மொழித்திறங்கள் கற்பிக்கப்படுவதில்லை. அதனால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் கற்றல் கற்பித்தலில் சிக்கல் ஏற்படுகிறது.

### மொழிப்பாடம் கற்பித்தலின் குறிக்கோள்

- மொழிக்கூறுகளை அறிந்து கொள்வதற்காக
- மொழித்திறன்களை வளர்த்தல் – கேட்டல், பேசல், வாசித்தல், எழுதுதல் (LSRW)
- சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்
- இலக்கிய நயத்துடன் இன்பத்தை உணரச்செய்தல்
- அழகுணராற்றலை வளர்த்தல்
- கற்பனை ஆற்றலை வளர்த்தல்
- பிறர் உணர்ச்சிகளை மதிக்கக் கற்றுத்தருதல்
- சிந்தனை ஆற்றலை வளர்த்தல்
- படைப்புத்திறனை வளர்த்தல்
- அறப்பண்புகளை வளர்த்தல்
- நடைமுறைக்கேற்ற வாழ்வியல் கொள்கைகளை வலியுறுத்தல்
- மொழியுணர்வை ஊட்டுதல்
- பண்பாடு, மரபுகளை அறியச் செய்தல்
- பிறருடன் தொடர்பு கொள்ளும் ஆற்றலை வளர்த்தல்

### மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கங்கள்

மொழி கற்பித்தலில் முதலாவதாக மொழியின் பல்வேறு உறுப்புகளை வளர்க்கும் வகையில் கற்றல் கற்பித்தல் அமைய வேண்டும். ஒவ்வொரு மொழியிலும் மொழி உறுப்புகளை எட்டு வகையாக மொழியியலாளர் கூறுகின்றனர். அவை,

1. ஒலியியல்
2. ஒலியனியல்
3. சொல்லியல்
4. சொல்லொலியனியல்
5. தொடரியல்
6. பொருளியல்
7. வார்த்தையியல்
8. எழுத்தியல்

என்பனவாகும்.

### ஒலியியல்

மொழியில் பயன்படும் ஒலிகளின் இயல்பையும் அவை எவ்வாறு பிறக்கின்றன என்பதையும் விளக்குகிறது.

**ஒலியனியல்**

"மொழியில் பயன்படுத்தப்படும் ஒலிகள் எவ்வாறு ஒலியன்களுக்குள் அமைகின்றன. இவ்வொலியன்கள் எவ்வாறு இயங்குகின்றன எனபதைப் பற்றி விளக்குகிறது" என குறிப்பிடுகிறார்.

**சொல்லியல்**

ஒலியன்களைக் கொண்டு சொற்கள் எவ்வாறு அமைகின்றன என்பதையும் சொற்கள் என்னென்ன இலக்கணப் பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றன என்பதையும் கூறுகிறது. ஓரெழுத்து சொற்கள், ஈரெழுத்து சொற்கள் மற்றும் அதற்கு மேலான சொற்கள், பொருள் தரக்கூடியவை, பொருள் தராதவை என்பதையும் விளக்குகிறது.

**சொல் ஒலியனியல்**

சொற்புணர்ச்சியால் ஏற்படும் மாற்றங்களை இம்மொழிக் கூறு விளக்குகிறது.

**தொடரியல்**

சொற்களைக் கொண்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இலக்கணப் பிழைகள் இல்லாமல் தொடர்களை அமைக்கும் முறையையும், சொற்றொடர்களை இணைக்கும் முறையையும் சொற்றொடர்களால் பத்தி அமைக்கும் முறையையும் சொற்றொடரியல் விளக்குகிறது.

**பொருளியல்**

சொற்களும் சொற்றொடர்களும் இணைந்து அவற்றின் பொருளைத்தரும் முறையை பொருளியல் விள்க்குகிறது.

**வார்த்தையியல்**

வார்த்தைகள் குறிக்கும் பொருளையும் அவை பயன்படும் முறையையும் இம்மொழிக் கூறு விளக்குகிறது.

**எழுத்தியல்**

எழுத்தியலில் மொழியில் பயன்படும் எழுத்துக்களைப் பற்றியும் அவை எவ்வாறு சேர்ந்து மொழியின் மற்ற உறுப்புகளை எழுதப் பயன்படுகின்றன என்பது பற்றியும் இம்மொழிக் கூறு விளக்குகிறது.

மொழி என்பது மேற்குறித்த மொழிக்கூறுகளின் கூட்டாகவும், மொழித்திறங்களின் கோவையாகவும் விளங்குகின்றன. இம்மொழிசார் திறங்கள்,

- கேட்டல் திறன்
- பேசுதல் திறன்
- வாசித்தல் திறன்
- எழுதுதல் திறன்

என நான்கு வகைப்படும்.

## கேட்டல் திறன்

கேட்டுணர்வது என்றால் பேசப்படுபவற்றைப் புரிந்து கொள்வது என்று பொருள். கேட்டல், பேசல் திறன் மொழி கற்பிக்கும் முறையில் மற்ற திறங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகத் தொடக்கத்திலேயே அமைகிறது.

கேட்டல் திறன் என்பது ஈடுபாடோடு கேட்டல், ஈடுபாடற்று கேட்டல், தனக்கு வேண்டியவற்றைப் பற்றிக் குறிப்பெடுக்க கேட்டல், கருத்தை உணரக் கேட்டல், புதுக் கருத்தை வெளியிடும் வகைக்குக் கேட்டல் என கேட்டலில் பல வகைகள் அடங்கும்.

## பேசுதல் திறன்

"பேசும் திறன் என்பது மொழியியலறிஞர்களுக்கு ஒலி வடிவம் கொடுத்து வெளிப்படுத்துதல் ஆகும். ஒருவர் பேசியதைப் போலப் பேசுதல், சொல் மற்றும் தொடர்களை உச்சரித்தல், உரையாடுதல், மேடையில் பேசுதல் போன்ற பல வகைகளில் பேசும்திறன் வளர்க்கப்படுகிறது" என குறிப்பிடுகின்றார்.

## வாசித்தல் திறன்

"வாசிக்கும் திறன் என்பது வரி வடிவிலிருக்கும் மொழி அலகுகளுக்கு ஒலி வடிவ உருக்கொடுத்து உச்சரிப்பது ஆகும். இதில் எழுத்துக் கூட்டி வாசித்தல், உரைக்கோவையை படித்தல், கருத்தை உணர வாசித்தல், உச்சரிப்பை செப்பனிட படித்தல் எனப் பல வகைகளில் இத்திறன் வளர்க்கப்படுகிறது குறிப்பிடுகின்றார்.

## எழுதுதல் திறன்

எழுதும் திறன் என்பது பேச்சையும் மனத்தில் இருக்கும் எண்ணங்களையும் வரி வடிவில் வெளிக்கொணர்வதாகும். இதில் பல நிலைகளைக் காணலாம். கோடுகளை வரைதல், எழுத்துக்களை வரைதல், சொற்கள் மற்றும் தொடற்களை எழுதுதல் போன்றவற்றால் இத்திறன் வளர்க்கப்படுகிறது என குறிப்பிடுகின்றார்.

மொழி என்பது மேற்குறித்த மொழித்திறங்களின் கூட்டாகவும், மொழி உறுப்புகளின் கோவையாகவும் விளங்குகின்றன என்பதை மொழியியலறிஞர் மா.சு.திருமலை (பக்.18-19) குறிப்பிடுவது இங்கு நோக்குவதற்குரியது.

ஒவ்வொரு மொழித்திறனையும் அதனோடு தொடர்புடைய ஒவ்வொரு மொழி உறுப்புகளையும் கற்பிப்பதற்கு பயன்படுத்தப்படும் மொழிப்பயிற்சி ஓரளவு இருந்தாலும், ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய கற்பித்தல் முறைகள் சரியாக இல்லாமையால் தாய்மொழியில் அனைத்துத் திறங்களிலும் சிக்கல் தோன்றுகின்றது.

## கிராமப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல்

கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தலில் பழைய கற்பித்தல் முறையையே பின்பற்றுகின்றனர். கிராமப்புறப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் செய்யுள் பாடல்களைப் பக்திப் பாடல்களின் ராகத்தில் மனப்பாடப்பகுதிப் பாடலாகவே கற்பிக்கின்றனர். இவ்வாறு பாடல் முறையில் மாணவர்களுக்குக் கற்பிப்பதால் மாணவர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விடுகின்றன. என்றாலும், ஆசிரியர் மொழிக்கூறுகளின் அடிப்படையில் மொழித்திறங்களை முறையாகக் கற்பிக்கவில்லை. இதனால் மாணவர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

## நகர்ப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல்

நகரத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் என்பது புதிய கற்பித்தல் முறைகளைக் கடைப்பிடிக்கக் கூடியதாக அமைகிறது. ஒரு பாடம் நடத்துவதற்கு முன்னர் அப்பாடம் பற்றிய பொருள் பொருந்திய கதை, படங்களை மாணவர்களிடம் காட்டிப் பிறகு அப்பாடத்தை நடத்துகின்றனர். இருந்தாலும் மற்ற பாடங்களுக்குக் கொடுக்கும் நேரத்தைத் தமிழ்ப்பாடம் கற்பித்தலில் செலவழிப்பதில்லை. மற்ற பாடங்களுக்கு, (எ.கா) கணக்கு, அறிவியல், வரலாறு, ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு முன்னுரிமை தருகின்றனர். தமிழ்தானே என்று அலட்சியமாக இருப்பதால் மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்பதில் ஈடுபாடு இல்லாமல் போகிறது. ஆசிரியர்களும் தமிழை முறையாக மொழிக்கூறுகளையும் மொழித்திறங்களையும் கற்பிக்காததால் இம்மாணவர்களிடையே பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

## மொழிப்பாடத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள்

மொழிப் பாடத்திட்டம் கீழ்க் குறிப்பிட்டுள்ள மொழிப் பண்புகளை, மொழித் திறன்களை, மொழி இலக்குகளை அடையும் நோக்கை மையமாகக் கொண்டது.

1. மொழி வாயிலாகக் குழந்தைகள் கற்பனைத் திறனை மேம்படுத்தவும் தானே கற்கவும் நடைமுறை இலக்கணத்தைப் புரிந்து கொண்டு பயன்படுத்தவும் மொழிப்பாடத்திட்டம் வழிவகுத்துள்ளது.
2. உயர்நிலை மொழியாற்றல்களான மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடை அளித்தல், குறிப்பெடுத்தல், பகுத்தல், தொகுத்தல், வகைப்படுத்தல், விவரித்தல், வெளிப்படுத்துதல், இதழ் தயாரித்தல், நாட்குறிப்பு எழுதல்,ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது.
3. தாம் சொல்லும் செய்திகளைக் குழந்தைகள் உள்வாங்கிக் கொண்டு செயல்படுதல் கேட்ட, படித்த செய்திகளின் மையக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளல், சிந்தித்தல், கருத்துத் தொடர்புடன் எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களை அடைய வழி செய்யப்பட்டுள்ளன.
4. உயர்நிலை மொழித்திறன்களான கதை, கவிதை, கட்டுரை, உரையாடல், நாடகம் ஆகியவற்றை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

## ஆய்வின் நோக்கம்

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வு தேர்வு செய்யப்பட்ட நான்கு பள்ளிகளில் உள்ள ஒன்பது, பத்தாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் கற்றல் கற்பித்தலில் பெறப்பட்ட சிக்கல்களின் அடிப்படையில் சிக்கல்களை வகைப்படுத்தி அதற்கான தீர்வுகளை ஆராயும் நோக்கில் அமைகிறது.

## ஆய்வின் எல்லை

உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் கற்றல் கற்பித்தலின்போது பயன்படுத்தப்படும் மொழிக்கூறுகளையும் மொழித்திறங்களையும் தன்னகத்தே முதன்மைப்படுத்திய குறைந்தபட்ச கற்றல் கற்பித்தலைக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

## முடிவுரை

குழந்தைகள் மொழித்திறன் பெறவும் மொழி ஆளுமையில் வல்லமை பெறவும் குழந்தைகளின் விருப்பத்தை, தேவையை, எண்ணத்தை நிறைவு செய்யவும் மொழி ஆற்றலானது தேவைப்படுகிறது. குழந்தைகள் பாதுகாப்புடன், அச்சமற்ற சூழலை உருவாக்கிக் கொடுத்து குழந்தைகளின் ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டு மொழி கற்பித்தல் வேண்டும். மொழிப்பாடமே பிற பாடங்களுக்கு அடிப்படையாகும். மொழியே அனைத்து வகையான பாடங்களைக் கற்றலும் கற்பித்தலும் மொழி அடிப்படை என்பதால் மொழிக்குப் பின்னால் உள்ள உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ள இயலும். எல்லா மாணவர்களின் மொழித் திறனைப் பெறும் வகையிலாகப் பிற பாடத்திட்டங்கள் அமைத்தல் வேண்டும். அவ்வாறு அமைப்பதன் மூலமாக சிறந்த புரிதல் நிலையை மாணவர்களுக்கு வழங்க முடியும்.

## துணைநின்றவை


- தண்டபாணி சு., (2015), தமிழ் கற்பிக்கும் முறைகள், **மதுரை:** மீனாப்பதிப்பகம்.
- ஸ்ரீ பாலாஜி லோகநாதன், (2011), கலைத்திட்டமும் கற்பித்தலின் நுட்பங்களும், **சென்னை:** ஸ்ரீ ஜி.வி பப்ளிக்கேசன்ஸ், திருவல்லிக்கேணி.
- அகத்தியலிங்கம், (2002), தமிழ்மொழி அமைப்பியல், **சிதம்பரம்:** மெய்யப்பன் தமிழாய்வகம், 53 புதுத்தெரு .
- இராசாராம் (பதிப்.), (1980), ஒலியியல், **சென்னை:** அனைத்திந்தியத் தமிழ் ஆய்வு மையம், மொழியியற் கழகம்.
- அரும்பு, (2002), ஏழாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் பயிற்சியில் உள்ள சிக்கலும் தீர்வுகளும் - ஓர் ஆய்வு, **தஞ்சாவூர்:** இந்திய மொழிகள் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம்.


******************

# மனவெழுச்சியும் மாணவர்களின் வளர்ச்சியும
# EMOTIONS AND STUDENTS GROWTH


## வீ.பூமிநாதன் | V. Boominathan

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நஞ்சனாபுரம், ஈரோடு - 638 107. அலைபேசி – 9751524368, மின்னஞ்சல் - vboomi@gmail.com, ORCID: https://orcid.org/0000-0002-3150-5672


## ஆய்வுச்சுருக்கம்


மாணவர்களின் மனவெழுச்சியினைக் கண்டறிந்து அதனை வளப்படுத்திக் கற்பிக்கும்போது மாணவர்களின் கற்றல் ஆற்றலானது மிகுகிறது. மாணவர்கள் வளம்பெறும்போது அவர்கள் சார்ந்துள்ள சமூகமும் சமூக விரோதிகள் இன்றிச் சிறந்த சமூகமாக மாறுகிறது.


## Abstract